பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை 11.04.2021 கதிர் 25

## வாகன விபத்துக்களில் 580 பேர் பரிதாபச் சாவு!

### இவ்வருடம் இதுவரை

2021 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் வாகன விபத்துக்களில் 580பேர்உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2

# யாழில் அடங்க மறுக்கும் கொரோனாக் கொத்தணி

### மாநகர சந்தை, கடைத்தொகுதி வர்த்தகர்கள் 22 பேர் உட்பட மேலும் 34 பேருக்குத் தொற்று



(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத்தொகுதி வர்த்தகர்கள், பணியாளர்களில் 22 பேர் உட்பட மேலும் 34 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று கிடைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

2

## ‘மொட்டு’வின் கூட்டணிக்குள் பூகம்பம் பங்காளிகளைச் சந்திக்கிறார் மஹிந்த

### 19ஆம் திகதி முக்கிய பேச்சு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும்பிரதமர்மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையில் எதிர்வரும் 19ஆம் திகதி முக்கியத்துவ-மிக்க சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது எட்டப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கூட்டணி யின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அரசில் அங் கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகள் இணைந்து மே தின நிகழ்வைத் தனியாகவும்,

2

## மஹிந்தவின் கூட்டத்தில் தேர்தல் பற்றி தீர்மானம்

### அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின்

2

## யாழ். நகரில் இயங்கிய மது உற்பத்தி நிலையம்

### இன்று சுற்றிவளைப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்ப்பாணத்தில் இயங்கிய சட்டத்துக்குப் புறம்பான கலப்பட மதுபான உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு விரியோகஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கசிப்பு உற்பத்திக்கான மூலப்

2

## வலிகாமத்தில் ஒன்றரை வருடங்களாக திருட்டில் ஈடுபட்டு வந்த இருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வலிகாமம் வடக்கில் ஒன்றரை வருடங்களாகத் திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் இருவர் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் காங்கேசன்துறை மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடமிருந்து

2

## நாளைய விசேட விடுமுறையில் மாற்றம்!

### அரச, தனியார் வங்கிகள் இயங்கும்

இலங்கையில் நாளை அறிவிக்கப்பட்டுள்ள விசேட விடுமுறை, வங்கி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 12ஆம் திகதியை விசேட விடுமுறை தினமாகக் குறிப்பிட்டு கடந்த 10ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

10, 11ஆம்

2

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து விமானப்படைச் சிப்பாய் சாதனை



பாக்கு நீரிணையில் குமார் ஆனந்தனின் சாதனை இலங்கை விமானப்படைச் சிப்பாயால் முறியடிக்கப்பட்டது

இலங்கை விமானப் படையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ரொஷான் அபேசுந்தர, பாக்கு

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் அடங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய தொடர்புடையவர்கள் என 431பேரின் மாதிரிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பெறப்பட்டன. அவர்களில் 34 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

431 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பிவைக்கட்டன.

அவற்றில் 34 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு இன்று காலை அறிக்கை கிடைத்துள்ளது.

22 பேர் யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள். ஏனைய 12 பேர் ஏற்கனவே தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களது நெருங்கிய தொடர்புடையவர்கள்.

22 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அவர்கள் சார்ந்த 6 வர்த்தக நிலையங்கள் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் மூடப்பட்டுள்ளன - என்றார்.

## யாழ். நகரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் பலவற்றைப் பயன்படுத்தி சீனிப் பாணி, எதனோல், எசன்ஸ் உள்ளிட்டவை உள்ளீடுகளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கலப்பட மதுபானம் யாழ்ப்பாணத்தில் தயாரித்து விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது என்று மாவட்ட குற்றத்தடுப்புப்பொலிஸார்தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் கலையகத்துக்கு அருகில் இயங்கி வரும் விடுதி ஒன்றிலேயே இந்த மதுபான உற்பத்தி நடைபெற்று வந்துள்ளது. இவ்வாறு இயங்கிய மதுபான உற்பத்தி மற்றும் விநியோக மையம் இன்று பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு தேடுதலில் அங்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கலப்பட மதுபானத்துக்கு பயன்படுத்தப்பட்ட எதனோல், சீனி, எசன்ஸ் மற்றும் கால் மற்றும் முழுப் போத்தல்கள், உபகரணங்கள் என்பவை யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உஜித் எம்.பி. லியனகேயின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஆர்.பிரதீப் தலைமையிலான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

## வாகன விபத்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாத்திரம் உயிரிழப்புகளை ஏற்படுத்திய ஐந்து வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, தமிழ் - சிங்களப் புத்தாண்டு காரணமாக இலங்கையில் ஏப்ரல் மாதம் மிகவும் பரபரப்பான மாதமாகக் காணப்படுகின்றது எனவும், இதனால் ஏப்ரல் 10ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அதிகளவான வீதி விபத்துகள் பதிவாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் நேற்று முதல் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்போது, தனியார் பஸ்களின் சாரதிகளைக் கண்காணிப்பதற்குச் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புத்தாண்டு காலப்பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்தவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், இந்தக் காலப்பகுதியில் போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாளைய விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிகள் வர இறுதி நாள்கள் என்பதாலும், 13, 14ஆம் திகதிகளில் தமிழ் – சிங்களப் புத்தாண்டு விடுமுறை காலம் என்பதாலும் அந்தத் தினங்களுக்கு இடைப்பட்ட 12 ஆம் திகதியையும் விசேட விடுமுறை தினமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த விடுமுறை தொடர்பாகத் தெளிவுப்படுத்தி இன்று காலை விசேட அறிக்கையைப் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி அரச ஊழியர்களுக்கு மாத்திரமே 12ஆம் திகதி (நாளை) அறிவிக்கப்பட்டுள்ள விசேட விடுமுறை பொருந்தும் எனவும், அரச மற்றும் தனியார் வங்கிகள் வழமை போன்று இந்தத் தினத்தில் இயங்கும் என்பதுடன், வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'மொட்டு'வின் கூட்டணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுங்கூட்டணியின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனிமாகவும் மேதின நிகழ்வுகளை நடத்துவதற்கு தயாராகி வருகின்றமை ஆளுந்தரப்புக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆளுந்தரப்பால் முன்வைக்கப்பட்ட புதிய யோசனைக்கு 11 பங்காளிகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சியின் பங்காளிகளைப் பிரதமர் சந்திக்கின்றார்.

கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு இதன் போது முடிவு கட்டப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## மஹிந்தவின் கூட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைத் தேர்தலை உத்வேகத்துடன் எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தயாராக இருக்கின்றது. அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துப் பங்காளிக் கட்சிகளும் பிரிந்து நின்று மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளப்போவதில்லை.

புதிய மாகாண சபை சட்டம் தொடர்பாக இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் – என்றார்.

## வலிகாமத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

15 மின் நீர்ப் பம்பிகள், வாகனங்கள் சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மோட்டர், புள்ளுவெட்டி இயந்திரம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின்போது சந்தேக நபர்களால் கடந்த ஒன்றரை வருடங்களாகத் திருடப்பட்டு வந்த பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

காங்கேசன்துறைக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த ஹொட்டகச்சியின் வழிகாட்டலில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மெர்சான் இந்துக்கலா சில்வா மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஆனந்த சுமணசிறி தலைமையிலான பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக்கு நீரிணையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரிணையை இரு புறங்களில் இருந்தும் கடந்து சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதன்படி தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையும் பின்னர் அங்கிருந்து மீண்டும் தலைமன்னார் வரையும் கடந்து, இலங்கையைச் சேர்ந்த குமார் ஆனந்தன் 50 வருடங்களுக்கு முன்னர் நிலைநாட்டியிருந்த சாதனையை றொஷான் அபேசுந்தர இன்று முறியடித்துள்ளார்.

றொான் அபேசுந்தர இருபுறங்களில் இருந்தும் 59.3 கிலோமீற்றர் தூரத்தை 28 மணித்தியாலங்கள் 19 நிமிடங்களில் கடந்துள்ளார்.

இதற்கு முன்னர் 1971 ஆம் ஆண்டில் 'ஆழிக்குமரன்' என அழைக்கப்படும் குமார் ஆனந்தன் பாக்கு நீரிணையை இரு புறங்களில் இருந்தும் 51 மணித்தியாலங்களில் கடந்து கின்னஸ் சாதனை படைத்தார்.

இதேவேளை, பாக்கு நீரிணையை முதன்முதலாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நவரத்தினசாமி என்ற இலங்கைத் தமிழர் 1954 ஆம் ஆண்டு நீந்திக் கடந்தார்.

இதையடுத்து, 1966ஆம் ஆண்டில் கொல்கத்தாவைச் சேர்ந்த மிகிர்சென் என்பவர் நீந்திக் கடந்தார்.

இந்நிலையில், 51வருட சாதனையை முறியடிக்கும் பயணத்தை நேற்று ஆரம்பித்த இலங்கை விமானப் படைச் சிப்பாய், இன்று முற்பகல் சாதனையை முறியடித்துப் புதிய சாதனையைப் புரிந்துள்ளார்.

இதனிடையே பாக்கு நீரிணையை இதுவரை 14 பேர் மட்டுமே கடந்துள்ளனர் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதில் தமிழ்நாடு சென்னையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரையாயிலான தூரத்தை நீந்திக் கடந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

# மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆப்பிழுத்த நிலையில் புதுடில்லி!

தமிழ் வார இதழ் ஒன்றில் இலங்கை – இந்திய உறவு தொடர்பில் ஒரு விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

“விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான கால கட்டத்தில்தான் இலங்கை அரசாங்கம் சீன சார்பு அரசாக மாற்றம் பெற்றது. இதற்குப் பின்னர் இலங்கை மீதான இந்தியாவின் கடிவாளம் கழன்று போய் விட்டது. இப்போது ‘உண்மையான நண்பன்’ என்றும், ‘நெருங்கிய அயலவன்’ என்றும், ‘அக்கறையுள்ள பங்காளி’, ‘உறவினர்’ என்றும் கூறிக் கொண்டாலும் இலங்கை அரசு இந்தியாவை ஒரு எட்டிய தொலைவில்தான் வைத்திருக்கின்றது.”

– என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுதான் கள யதார்த்தம். இதைத்தான் இப்பத்தியில் பல தடவைகள் நாமும் சுட்டிக் காட்டி வருகிறோம்.

இலங்கை – இந்திய ஒப்பந்த காலத்தில் அதற்கு எதிராகத் தென்னிலங்கை கிளர்ந்தபோது அதை ஆயுத முனையில் – கடும் எதிர்ப்புக்கு மத்தியில் – அடக்கி, ஒற்றைக்காலில் நின்று ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன. களத்தில் விடுதலைப் புலிகள் இருந்தமையால் அப்படி இலங்கை ஜனாதிபதியை செயற்பட வைக்க முடிந்தது புதுடில்லிக்கு.

இப்போது நிலைமை தலைகீழ். சில ஆண்டுகளுக்கு முன்னர், அப்போதைய இலங்கை அரசுடன் இந்தியா செய்து கொண்ட சர்வதேச உடன்பாட்டின் கீழான கடப்பாட்டைத் தான் நிறைவு செய்யாமல் விலகுவதற்கு தென்னிலங்கை எதிர்ப்பை துரும்புச் சீட்டாக முன்நிறுத்தியது கொழும்பு.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்தில் அதுதான் நடந்தேறியது.

இத்தகைய சர்வதேசக் கடப்பாட்டு விடயங்களில் தென்னிலங்கையைத் தனது கைப் பாவையாக வைத்து, தேவைப்படும் போது அதனைக் கிளர்ந்தெழச் செய்து, அதனை முன்னிறுத்தி, தனக்கு விருப்பமான முடிவுகளை மேற்கொள்ளும் தந்திரோபாயத்தைக் கொழும்பு முன்னெடுக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில், அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்யும் மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் கடப்பாடுகளில் ஒன்று. அதை புதுடில்லி வலியுறுத்துகின்றது. அதையும் கூட இப்படித் தென்னிலங்கையில் கிளர்ச்சியை – எதிர்ப்பை – தானே பின்னணியில் நின்று தூண்டி, கட்டவிழ்த்து விட்டுவிட்டு, அதைக் காட்டி, அதிலிருந்தும் பின்வாங்கும் நாடகத்துக்கு கொழும்பு தயாராகி விட்டது என்பது கண்கூடு.

இது தொடர்பில் ஏதும் செய்ய இயலாத நிலையில் – அணில் ஏற விட்ட நாய் வேறு வழியின்றி அண்ணாந்து பார்த்துக் குலைப்பது மாதிரி – வெறும் இராஜதந்திர ஆட்சேப உரைகளை ஆற்றுவதைத் தவிர பிற மார்க்கமற்ற இக்கட்டில் இந்தியா மாட்டிக் கொண்டு விட்டது என்பது தெளிவு.

இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடு என்று தனக்குத் தானே மகுடம் சூட்டிக் கொண்டுள்ள பரந்த பாரத தேசம், அதன் தென்கோடி முனையில் இந்தனூண்டு அளவில் இருக்கும் இலங்கையிடம் இராஜதந்திர சங்கடத்தில் மாட்டிக் கொண்டு முழியாய் முழிப்பது, சர்வதேச அரசியலில் புதிதாகக் கவனிக்கத்தக்க விடயம்.

ஜெனிவாவில் நடந்து முடிந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கை விடயத்தை ஒட்டி இந்தியா பலத்த குரலில் கூறிய செய்தி ஒன்றே ஒன்றுதான். அது, ஏற்கனவே இணங்கிய அதிகாரப் பகிர்வு முறைமையை முழு அளவில் கொழும்பு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே.

ஜெனிவா அமர்வு முடிந்த கையோடே இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பதிலடி கொடுத்தார் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

“சில நாடுகள் தங்கள் பூகோள நலன்களை எட்டுவதற்காக அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் பிரிவினையை அறிமுகப்படுத்தப் பார்க்கின்றன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சர்வதேச வல்லாதிக்க சக்திகள் நடத்த முயலும் அதிகாரப் போட்டியில் சம்பந்தப்பட இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை’ என்று இலங்கை ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்தமை இந்தியாவைச் சுட்டித்தான். பாரதத்தைச் சீண்டித்தான்.

இத்தகைய மோசமான குற்றச்சாட்டை மிகச் சிறிய நாடான இலங்கை சுமத்தும் போது, எந்தப் பிரதிபலிப்பும் காட்டாமல், பம்மிக் கொண்டு அடங்கியிருக்க வேண்டிய இறுக்கமான இக்கட்டு நிலைமை புதுடில்லிப் பேரரசுக்கு.

பின்புலத்தில் சீன வல்லாதிக்கத்தின் வலிமையை வைத்துக் கொண்டு வாலாட்டுகின்றது கொழும்பு. ஏதும் செய்ய முடியாத கையாலாகத்தனத்தில் இந்தியத் தலைமை.

இலங்கையில் தனது பலம் எது, பலவீனம் எது என்று சரியாகக் கணக்கிடாமல் – உண்மையான நண்பர் யார், கபட வேடதாரி – எதிரி யார் என்பதைத் தெளிவாக மதிப்பிடாமல் – நடந்து கொண்ட புதுடில்லி, அதனால் இலங்கை, சீனா என்ற இரண்டு சக்திகளுக்கு நடுவில் ஆப்பிழுத்த குரங்காகச் சிக்கி தவிக்கின்றது என்பதே உண்மை. காலம் பிந்தியாவது இது புதுடில்லிக்குப் புரிந்தால் நல்லது.

# யாழ். மாநகர முதல்வர் கைதானமை மக்களைத் திசைதிருப்பும் முயற்சி



## சஜித் சாடல்

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் கைதுசெய்யப்பட்ட சம்பவம் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியே என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், யாழ். மாநகர முதல்வர் தமது கடமையின் போது ஏதாவது பிழை செய்திருந்தால் அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நடைமுறைகள் உள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதைவிடுத்து, அவரைப் பயங்கரவாதிபோலச் சித்திரித்து, நாட்டில் அரசாங்கத்தினர் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் இன்னும் அறியப்படாது உள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், எனவே, புதிதாக அச்சங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்து ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

# சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும்

## இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் வலியுறுத்தல்



சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகுமென இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) முஹம்மது சாத் கட்டாக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வெளியாகும் தமிழ் நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலிலேயே முஹம்மது சாத் கட்டாக் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது -

அனைத்து நாடுகளும் தங்களது எல்லைக்குள் பாதுகாப்பு, சமாதானம் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும் இந்த விடயங்களுக்கு ஒவ்வொரு நாடுகளும் மதிப்பளித்து செயற்பட வேண்டும்.

இதேவேளை அரசியல் மற்றும் புவிசார் பொருளாதார வளங்கள் ஆகியவகையே இலங்கையை உலக வல்லாதிக்க சக்திகள் இலக்கு வைப்பதற்கு முக்கிய காரணமாகும்.

அத்துடன் அனைத்து நாடுகளும் தங்களது நாட்டிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினரின் கலை மற்றும் கலாசாரம் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உருத்திரபுரீஸ்வரர் கோயிலில் விகாரை அமைக்க முயற்சி



கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் அமைந்துள்ள உருத்திரபுரீஸ்வரர் கோயிலில் பௌத்த விகாரை அமைக்க முயற்சிக்கப்படலாம் என்பது தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிறிதரன் ஆகியோர் தலைமையில் உருத்திரபுரீஸ்வரர் கோயிலின் மண்டபத்தில் நேற்று (சனிக்கிழமை) மாலை நடைபெற்றது.

இதில், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உருத்திரபுரீஸ்வரர் கோயில் வளாகத்தில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் கோணத்தில் அப்பகுதியில் பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கலாம் என்பது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. இதன்பின்னர், மேற்படி குழுவினர் ஆலய வளாகத்தில் காணப்பட்ட பண்டைய காலத்து கருங்கல் தூண்களையும் பார்வையிட்டிருந்தனர்.

# நல்லிணக்க வழிமுறைகளை அமுல்படுத்தல்; இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கம்



இலங்கையில் நல்லிணக்க வழிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் பற்றி இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கமளித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, கொழும்பைத் தளமாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் மூத்த இராஜதந்திர பிரதிநிதித்துவத்தை வெளிவிவகார அமைச்சகத்தில் சந்தித்து, இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கியுள்ளார்.

அரசமைப்பு சீர்திருத்த செயல்முறை, ஜனநாயகநிறுவனங்களைவலுப்படுத்துதல் மற்றும் நல்லிணக்க வழிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் உள்ளிட்ட பல செயற்பாடுகளின் தூதர்களை அமைச்சர் புதுப்பித்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனாவுக்கு பின்னரான சூழ்நிலையில், இலங்கையில் சுற்றுலாவை புதுப்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தனிமைப் படுத்தல் தொடர்பான இலங்கை அரசின் சுகாதார நெறிமுறைகள் பற்றியும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

பிரான்ஸின் தூதர் எரிக் லாவெர்டு, இத்தாலியின் தூதர் ரீட்டா மன்னெல்லா, ருமேனியா தூதர் விக்டர் சியுஜ்தியா அத்துடன் ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் துணைத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கை 846 தெருக்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக அறிவிப்பு




தமிழகத்தில் கடந்த சில நாள்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. கடந்த மாதத் தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 400இற்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்போது பாதிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருகிறது. அந்த வகையில் நாள் ஒன்றுக்கு தமிழகத்தில் ஐந்தாயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கொரோனாப் பரவலைத் தடுக்க தமிழக சுகாதாரத்துறை சார்பில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக ஒரே தெருவில் 3 பேருக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டால் அந்தத் தெரு அடைக்கப்பட்டு கட்டுப்பாட்டுப் பகுதியாக அறிவிக்கப்படுகிறது. இந்தப் பகுதிகள் அனைத்தும் தடுப்புகள் அமைத்து யாரும் உள்ளே மற்றும் வெளியே போகாத வண்ணம் பாதுகாக்கப்படுகின்றன. தமிழகத்தில் 846 தெருக்கள் கட்டுப்பாட்டுப் பகுதியாக மாற்றப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன் வெளியிட்டுள்ள அரசாணையில்,

'தமிழகத்தில் 846 தெருக்களில் 3 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் அதிகபட்சமாக சென்னையில் 505 தெருக்களும், கோவையில் 92 தெருக்களும், செங்கல்பட்டில் 41 தெருக்களும், திருவாரூரில் 40 தெருக்களும், திருவள்ளூரில் 33 தெருக்களும், ஈரோட்டில் 20 தெருக்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுபோல, தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதன் காரணமாக கட்டுப்பாட்டுப் பகுதிகளாக மாற்றப்பட்டுள்ள ஏனைய பிரதேசங்களின் விவரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். இந்தக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடர்ந்து 7 நாள்களுக்கு புதிதாக கொரோனாத் தொற்று யாருக்கும் உறுதி செய்யப்படவில்லை என்றால், அந்தப் பகுதிகளில் அமைக்கப்படும் தடுப்புகள் அனைத்தும் அகற்றப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாப் பரவல் எதிரொலி புதிய கட்டுப்பாடுகளும் தளர்வுகளும்

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருவதைத் தொடர்ந்து நேற்று முதல் வழிபாட்டுத் தலங்களை இரவு 8 மணிக்குள் மூட வேண்டும், அரசு பஸ்களில் நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கக்கூடாது, தியேட்டர்களில் 50 சதவீத இருக்கைகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது போன்ற பல்வேறு கட்டுப்பாடுகள் அமுலுக்கு வந்தன.

13 ஆம் திகதி முதல் ரம்ழான் நோன்பு தொடங்குவதால் வழிபாட்டுத் தலங்களை இரவு 8 மணிக்குள் மூட வேண்டும் என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி, இரவு 10 மணி வரை திறந்து வைக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழ்நாடு முஸ்லிம் லீக் மற்றும் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இவற்றைக் கருத்தில் கொண்டு புதிய கட்டுப்பாடுகளையும் தளர்வுகளையும் தமிழக அரசு நேற்று அறிவித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த 11 ஆம் திகதி முதல் புதிய கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்படுகின்றன. அதன்படி, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள மெரினா உள்ளிட்ட அனைத்து கடற்கரைப் பகுதிகளிலும் சனி, ஞாயிறு மற்றும் அனைத்து அரசு விடுமுறை நாள்களிலும் பொதுமக்கள் கூடுவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் பொதுமக்கள் வழிபாடு செய்ய இரவு 8 மணி வரை அனுமதிக்கப்படும் என்ற கட்டுப்பாடு தளர்த்தப்படுகிறது. வழிபாட்டுத் தலங்கள் அரசு வெளியிட்ட நிலையான வழிமுறைகளைப் பின்பற்றி, இரவு 10 மணி வரை திறந்து வைக்க அனுமதிக்கப்



படுகிறது. இருப்பினும், அனைத்து வழிபாட்டுத்தலங்களிலும் திருவிழாக்கள் மற்றும் மதம் சார்ந்த கூட்டங்கள் நடத்த அனுமதி இல்லை.

புதிய திரைப்படங்கள், முதல் 7 நாள்களுக்கு மட்டும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட காட்சிகளை விட கூடுதலாக ஒரு காட்சி திரையிட அனுமதிக்கப்படுகிறது. அனைத்து காட்சிகளின் போதும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி 50 சதவீத இருக்கைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்' - என்று கூறப்பட்டுள்ளது.

# இலங்கை - இந்தியா சிறப்பு விமான சேவை; மத்திய அரசு அறிவிப்பு

இந்தியா - இலங்கை நாடுகளுக்கு இடையே இருதரப்பு சிறப்பு பயணிகள் விமான சேவையைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் சர்வதேச விமான சேவை நிறுத்தப்பட்டது. இதையடுத்து, கடந்த ஆண்டு மே மாதம், 'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் சிறப்பு சர்வதேச



பயணிகள் விமானங்கள் இயக்கப்பட்டன. பின்னர், ஜூலை மாதம் முதல் இரு நாடுகளுக்கிடையேயான விமான சேவைகள் தொடங்கப்பட்டன. இந்த சிறப்பு ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையே சிறப்பு பயணிகள் விமானத்தை பாதுகாப்பு நடைமுறைகளோடு இயக்க முடியும்.

இதன்படி, இந்தியாவுக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், நைஜீரியா, மாலைதீவு, ஜப்பான், ஈராக், ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, பஹ்ரைன், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கிடையே இருதரப்பு விமான சேவை கட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது இந்தியா, இலங்கை இரு நாடுகளுக்கிடையேயும் விமான சேவையை நடத்த உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது. அமைச்சக டுவிட்டரில், 'இலங்கையுடன் ஒப்பந்தத்தை இந்தியா இறுதி செய்துள்ளது. இதன் மூலம், சார்க் பிராந்தியத்தில் 6 ஆவது நாட்டுடனும் ஒட்டு மொத்தமாக 28 நாடுகளுடனும் இருதரப்பு விமான சேவை சாத்தியமாகியுள்ளது. விரைவில் இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இடையே அனைத்து தகுதி வாய்ந்த பயணிகளும் பயணத்தை மேற்கொள்ளலாம்' என கூறப்பட்டுள்ளது.

# கொரோனா நோயாளியிடம் பணம் வசூல் அரசு மருத்துவமனை ஊழியர் பணி நீக்கம்



மதுரை அரசு மருத்துவமனையில் கொரோனா நோயாளியிடம் பணம் வசூலித்த ஒப்பந்த ஊழியர் ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

மதுரை அரசு மருத்துவமனையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க சிறப்புப் பிரிவு உள்ளது. தற்போது கொரோனா 2ஆவது அலையின் தாக்கம் அதிகரித்துள்ளதால், இந்த பிரிவில் சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், கொரோனா விடுதியில் பெண் ஊழியர் ஒருவர் ஒரு நோயாளியிடம் பணம் பெறும் காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலானது. இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் சம்பவம் உறுதியானதையடுத்து அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் சிலர் கூறுகையில், "கொரோனா விடுதியில் சுத்தம், சுகாதாரம் இல்லை. படுக்கை வசதி இல்லை. சிகிச்சைக்கான ஊசிகளைக் கெஞ்சிக் கேட்டு வாங்க வேண்டியிருக்கிறது. நல்ல சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைக்குச் செல்லுங்கள் என ஊழியர்களே சொல்கின்றனர். சில ஊழியர்கள் சிகிச்சை வழங்க பணம் பறிக்கின்றனர். குறைதீர் குழு ஒன்றை கொரோனா விடுதியில் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை கிடைக்க வழிசெய்ய வேண்டும்" என்று கோரிக்கை முன்வைத்தனர்.

# மேற்கு வங்க துப்பாக்கிச் சூடு

## மத்திய தொழில் பாதுகாப்புப் படை விளக்கம்

மேற்குவங்காளத்தில் 4ஆம் கட்டத் தேர்தலின் போது பல்வேறு பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

அம்மாநிலத்தின் கூச் பெஹார் மாவட்டம் சீத்தல்குச்சி தொகுதிக்கு உள்பட்ட ஜார்பட்கி என்ற பகுதியில் உள்ள ஒரு வாக்குச்சாவடிக்கு அருகே திடீரென வன்முறை ஏற்பட்டது. இந்த மோதலில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர்.

சி.ஆர்.பி.எஃப். எனப்படும் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி குற்றஞ்சாட்டினார். ஆனால், குறிப்பிட்ட அந்த வாக்குச்சாவடியில் தங்கள் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என்று சி.ஆர்.பி.எஃப். அறிவித்திருந்தது.

இந்நிலையில், இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டது சி.ஐ.எஸ்.எஃப். எனப்படும் மத்திய தொழிற்பாதுகாப்பு படைப்பிரிவின் விரைவு எதிர்வினைப்படை (Quick Reaction Team) என்பது தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மத்திய தொழிற்பாதுகாப்பு படைப்பிரிவு அதிகாரப்பூர்வ விளக்கமும் அளித்துள்ளது.

'50 முதல் 60 பேர் கொண்ட கும்பல் சி.எஸ்.எஃப். விரைவு எதிர்வினைப்படையினர் மீது தாக்குதல் நடத்தியது. இதனால், தற்காப்புக்காக படையினர் வானத்தை நோக்கி 6 முறை துப்பாக்கியால் சுட்டுக் கும்பலைக் கலையச்செய்தனர். அதன்பின், ஒரு மணி நேரம் கழித்து கிட்டத்தட்ட 150 பேர் கொண்ட மற்றொரு கும்பல் வாக்குச்சாவடி எண் 186 இல் நுழைந்து, அங்கிருந்த தேர்தல் அதிகாரிகளை தாக்கத்தொடங்கினர்.

அவர்களை சி.ஐ.எஸ்.எஃப். அதிகாரிகள் தடுக்க முயற்சித்தனர். ஆனால், அந்தக் கும்பல் பிற தேர்தல் அதிகாரிகளையும் தாக்கத்தொடங்கினர். சிலர் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிகளைப் பறித்துச் செல்ல முயற்சித்தனர். இதனால், சி.ஐ.எஸ்.எஃப். வீரர்கள் வானத்தை நோக்கி 2 முறை துப்பாக்கியால் சுட்டனர். ஆனால், அந்த எச்சரிக்கையை கண்டுகொள்ளாத அவர்கள் தொடர்ந்து சி.ஐ.எஸ்.எஃப். வீரர்களை நோக்கி தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

ஆகையால், தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை உணர்ந்த சி.ஐ.எஸ்.எஃப். வீரர்கள் அந்த கும்பலை நோக்கி 7 முறை துப்பாக்கியால் சுட்டனர். இதில் அந்தக் கும்பலில் 5 முதல் 6 பேர் காயமடைந்திருக்கலாம் அல்லது உயிரிழந்திருக்கலாம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியது மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் (சி.ஆர்.பி.எஃப்.) என்று தகவல் வெளியான நிலையில் தற்போது மத்திய தொழிற்பாதுகாப்பு படையின் (சி.ஐ.எஸ்.எஃப்.) விளக்கம் வெளியாகியுள்ளது. இரு படைகளுமே மத்திய பாதுகாப்பு படையின் பிரிவுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆப்கானிஸ்தானில் வான் தாக்குதலில் தலிபான் ஆளுநர் உட்பட 22 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே 20 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

ஆப்கானிஸ்தானின் பல்வேறு நகரங்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகள் அங்கு தங்களுக்கென தனி ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள படாக்சான் மாகாணத்தில் உள்ள வர்துஜ் நகரம் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த நகரின் ஆளுநராக தலிபான் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த காரி ஹைதர் என்பவர் இருந்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வர்துஜ் நகரில் தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகளை குறிவைத்து இராணுவம் வான் தாக்குதலை நடத்தியது.

இதில் தலிபான் ஆளுநர் காரி ஹைதர் மற்றும் அவருடன் இருந்த 21 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் 23 பயங்கரவாதிகள் படுகாயமடைந்தனர். அதோடு இந்த வான் தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகளின் பதுங்கு குழிகள் மற்றும் ஆயுதக் கிடங்குகள் உள்ளிட்டவை நிர்மூலமாக்கப்பட்டன.

இதனிடையே மத்திய மாகாணமான கஜினி மாகாணத்தில் தலீபான் பயங்கரவாதிகளை குறிவைத்து ராணுவம் நடத்திய வான் தாக்குதலில் 13 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.

உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஆப்கானிஸ்தான் அரசும், தலிபான் பயங்கரவாத அமைப்பும் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதும், இதில் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் ஏற்படாத சூழலில் நாட்டில் வன்முறை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவில் பயங்கர நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவு; 8 பேர் பலி

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியா, நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் புவித்தட்டுகள் அடிக்கடி நகரும் இடத்தில் அமைந்துள்ளது.

இதனால் அங்கு நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு, நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

இந்நிலையில் அந்த நாட்டின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் நேற்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. மாகாணத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள மலாங் நகரை மையமாகக் கொண்டு இந்த நிலநடுக்கம் தாக்கியது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 புள்ளிகளாக பதிவானது. கடலுக்கு அடியில் 82 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கம் மலாங் நகரம் முழுவதும் கடுமையாக உணரப்பட்டது. சில விநாடிகள் நீடித்த நிலநடுக்கத்தின் போது வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் அச்சமடைந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.



இந்த நிலநடுக்கத்தால் ஜாவாவின் லுமாஜாங், மலாங் மாவட்டங்களில் 8 பேர் பலியாகினர். 23 பேர் காயமடைந்தனர். இரு மாவட்டங்களிலும் 300இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன

கடலுக்குக் கீழே நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தாலும், அதனால் சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை. எனினும் பாறை மற்றும் மண் சரிவு ஏற்படவாய்ப்புகள் உள்ளன என்பதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமெரிக்காவில் பேஸ்புக் அலுவலக ஒருபகுதி கொரோனாத் தடுப்பூசி மையமாக மாற்றம்




அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பேஸ்புக் தலைமையகத்தின் ஒரு பகுதி கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் மையமாக மாற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கொரோனாத் தடுப்பூசி விநியோகத்தை துரிதப்படுத்த அந்நாட்டு அரசுடன் பேஸ்புக் கைக்கோர்த்துள்ளது. அதன்படி மென்லோ பூங்காவில் உள்ள பேஸ்புக் அலுவலகத்தில் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுவருகிறது.

முன்னதாக கொரோனா வைரஸ் மற்றும் தடுப்பூசி குறித்து பதிவிடப்படும் அவதூறு கருத்துக்களை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் உடனுக்குடன் நீக்கிவருகிறது.

## இளவரசர் பிலிப்பின் இறுதிச்சடங்கு ஏப்ரல் 17 இல் நடைபெற ஏற்பாடுகள்



இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும் இளவரசருமான பிலிப் (99), நேற்று முன்தினம் உயிரிழந்தார். இவர் இங்கிலாந்து அரச குடும்ப வரலாற்றில் இளவரசராக நெடுங்காலம் சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இளவரசர் பிலிப் மரணத்துக்கு உலகெங்கிலும் உள்ள மன்னர்கள், அரச தலைவர்கள் முன்னாள் மற்றும் இந்நாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் என பல தரப்பினரும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், மறைந்த இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கு தொடர்பான நிகழ்வுகளுக்கான அறிவிப்பை அவரது மனைவியும் இங்கிலாந்து ராணியுமான இரண்டாம் எலிசபெத் வெளியிட்டுள்ளார்.

ஏப்ரல் 17ஆம் திகதி மறைந்த இளவரசர் பிலிப்பின் இறுதிச்சடங்கு நடைபெறும். இந்த இறுதிச்சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் நேரலையாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும். மேலும் 17ஆம் திகதி மாலை 3 மணிக்கு இங்கிலாந்துமுழுவதும்ஒருநிமிடமௌனஅஞ்சலிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இறுதிச்சடங்கு நிகழ்வில் பங்கேற்கும் அனைவரும் முகக்கவசம் அணிந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் 30 பேர் மட்டுமே இறுதிச்சடங்கில் பங்கேற்க உள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் நேரம் என்பதால் வெகுவிமர்சையாக ஊர்வலம் மற்றும் அரசு மரியாதை எதுவும் முன்னெடுக்கப்படாது.

வரும் 17ஆம் திகதி மாலை வின்ட்சர் கோட்டையில் இருந்து உரிய மரியாதையுடன் இளவரசர் பிலிப்பின் உடல் அருகாமையில் உள்ள செயிண்ட் ஜார்ஜ் சேப்பலுக்கு எடுத்துச்செல்லப்படும்.

இறுதிச்சடங்கில் இராணுவத்தினரே பங்கேற்பார்கள், குடும்ப உறுப்பினர்கள் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இளவரசரின் தனிப்பட்ட அதிகாரிகளும் பங்கேற்பார்கள்.

இந்த ஊர்வலம் சரியாக 3 மணிக்கு செயிண்ட் ஜார்ஜ் சேப்பலுக்கு சென்றடையும், அதன் பின்னர் ஒரு நிமிடம் மவுன அஞ்சலிக்கு அழைப்பு விடுக்கப்படும். இறுதி ஊர்வலம் முடியும் வரையில் தேவாலய மணிகள் முழங்கும். அத்துடன் துப்பாக்கி குண்டு முழங்க மரியாதை செலுத்தப்படும்.

இறுதிச்சடங்குகளில் பங்கேற்கும் நபர்களின் பட்டியல் உள்ளிட்ட முக்கிய தகவல்கள் வரும் நாட்களில் வெளியிடப்படும் என பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையை தூங்கவைத்து விட்டு 21 வயது தாய் தற்கொலை

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேக்கஞ்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தாயான 21 வயதனாதெய்வேந்திரன்தெய்வலோஜினி என்பவர் தனது வீட்டில் நேற்று முன்தினம் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவரின் வருமானம் போதாமையால் அவரோடு முரண்பட்ட இவர் தனது குழந்தையை அன்போடு தூக்குவதற்குக் கூட கணவருக்கு அனுமதி வழங்காமலிருந்துள்ளார்.

நேற்று மாலை குழந்தையை தூக்குவதற்காக கணவர் சென்றபோது கொடுக்க மறுத்ததால் மனைவியை கடுமையாக பேசியிருக்கிறார். இதனால் மனஉளைச்சலுக்குள்ளான நிலையில் நேற்றிரவு 7 மணியளவில் குழந்தையுடன் உறங்கியுள்ளார்.

இரவுச் சாப்பாட்டை உட்கொள்ள கணவர் அழைத்த போது எனக்கு பசியில்லை நீங்கள் சாப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டு மீண்டும் உறங்கினார். கணவரும் இரவுச் சாப்பாட்டை உட்கொண்டு விட்டு மனைவி குழந்தை ஆகியோர் உறங்கிய இடத் திலேயே உறங்கியுள்ளார்.

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த தந்தைக்கு தனது நெஞ்சில் கைவைத்து குழந்தை அழும் சத்தம் கேட்டதும் எழுந்து மனைவியை பார்த்தபோது காணாத நிலையில் அன்னார்ந்து பார்த்தபோது மின்விசிறியில் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டயர் வெடித்து வயலுக்குள் பாய்ந்த வாகனம்



கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான சம்பவமொன்று நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வெலிகந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தமடு பிரதான வீதியில் வைத்தே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறிய ரக வான் ஒன்று குறித்த பகுதியால் பயணித்துக்கொண்டிருந்த போது டயர் வெடித்ததில் வான் வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகி யுள்ளது. மூவர் பயணம் செய்த வேனில் ஒருவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதோடு, மற் றைய இருவரும் எவ்விதமான பாதிப்புகளும் இன்றி தப்பியுள்ளனர்.

இவ் விபத்தில் வானுக்கு கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதோடு, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாகாண சம்பியனாக கிண்ணியா நோவா அணி முடிசூடிக் கொண்டது



46 ஆவது தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு கிழக்கு மாகாண ரீதியாக உதைப் பந்தாட்டப் போட்டித் தொடர் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றிய நிலையில் இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்ட கிண்ணியா நோவா அணியினர்மாகாண சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டன.

இறுதிப் போட்டி கந்தளாய் லீலரத்ன பொது விளையாட்டு மைதானத்தில்கடந்த 5 ஆம் திகதி இடம் பெற்றது.

அம்பாறை அணியினருடன் நோவா அணியினர் ஒன்றுக்கொன்று எதிர்த்தாடிய நிலையில் 5:0 என்ற கோல் கணக்கில் முதல் சுற்றில் வெற்றியடைந்து இறுதிச் சுற்றுக்கு சென்றிருந்தனர். இறுதிச் சுற்றில் மட்டக்களப்பு அணியினருடன் எதிர்த்தாடி 3:1 என்ற கோல் கணக்கில் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட கிண்ணியா நோவா அணியினர் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டனர்.

போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன. இதில் கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனையில் உயிரிழந்த நிலையில் புனுகுப் பூனை

இலங்கையில் அருகிவரும் உயிரினங்களில் ஒன்றான புனுகுப் பூனை ஒன்று நேற்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்ன பகுதியில் வைத்தே இவ் உயிரினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரியவகை உயிரினமாக காணப்படும் இப் புனுகுப் பூனை வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர்.

# கல்முனை மாநகர சபையினர் வாகன சாரதிகளுக்கு அறிவிப்பு

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவு எல்லையினுள் எவரிடமும் வாகனத் தரிப்பிடக் கட்டணம் செலுத்த வேண்டாம் என கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

இப்பிரதேசத்தில் சில நபர்கள் வாகனத் தரிப்புக் கட்டணம் அறவிடுவதாக மாநகர சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆனால் இவ்வாறு வாகனத் தரிப்புக் கட்டணம் அறவிடுவதற்கு மாநகர சபையினால் பள்ளிவாசலுக்கோ வேறு எவருக்குமோ அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

ஆகையினால், சாய்ந்தமருது பிரதேசத்தில் பிரதான வீதியாயினும், உள்ளூர் வீதிகளாயினும் மாநகரசபை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை எவரிடமும் வாகனத் தரிப்புக் கட்டணம் செலுத்த வேண்டாம் என வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எவராவது வாகனத் தரிப்புக் கட்டணம் கோரினால் உடனடியாக மாநகர சபைக்கு அறிவிக்கவும்.

மேலும், இதன் பின்னர் எவராவது வாகனத் தரிப்புக் கட்டணம் அறவிட்டால் இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுஅவர்கள்மீதுசட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# விசேட சுற்றிவளைப்பில் இரண்டு நாளில் 25 பேர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் பல்வேறு இடங்களில் கடந்த இரு நாள்களாக முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களிடமிருந்து 25 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

உழவு இயந்திரங்கள் - 16, டிப்பர் - 07, லொறி - 02 ஆகியனவே கைப்பற்றப்பட்டுள்ளன. சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த குற்றச்சாட்டிலேயே மேற்படி 25 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனேரி, பொத்தானை, புலிபாய்ந்தகல், ஓமடியாமடு, ஊத்துச்சேனை, வெள்ளாமைச்சேனை மற்றும் புணாணை ஆகிய பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வருவதாக வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸார் மற்றும் வாழைச்சேனை அதிரடிப்படையினருடன் இணைந்து இரு நாள்கள் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் மரக்கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும், அதனை தடுப்பதற்கு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசேட பொலிஸ் குழு செயற்பட்டு வருவதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனிக்கு ரூபா 12 லட்சம் அபராதம் தவறு தொடர்ந்தால் 2 போட்டிகள் தடை




நேற்று நடைபெற்ற ஐ.பி.எல். 14 ஆவது சீசனின் இரண்டாவது லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ், ஓவர்களை வீசி முடிக்க மேலதிக நேரத்தை எடுத்துக்கொண்டதன் காரணமாக அணித்தலைவர் மகேந்திரசிங் டோனிக்கு 12 லட்சம் (இலங்கை நாணயப் பெறுமதி) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது இந்த சீசனின் முதல் தவறு என்பதால் வெறும் அபராதம் மட்டும் விதிக்கப்படுவதாகவும் தவறு தொடரும் பட்சத்தில் டோனிக்கு இரண்டு போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்படும் எனவும் ஐ.பி.எல். நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

20 ஓவர்கள் கொண்ட இன்னிங்ஸினை 90 நிமிடங்களில் முடிக்கவேண்டும் என்பது அண்மையில் இறுக்கமாக்கப்பட்ட ஐ.பி.எல். விதியாகும். ஒரு மணி நேரத்திற்குள் 14.1 ஓவர்களை வீசி முடித்திருக்க வேண்டும். 90 ஆவது நிமிடத்தில் குறைந்த பட்சம் 20 ஆவது ஓவரை துவங்கியிருக்கவாவது வேண்டும். இல்லை என்றால் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாவது ரி20 போட்டியில் பாகிஸ்தான் வென்றது!




தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான முதல் இருபதுக்கு இருபது போட்டி ஜோகன்ஸ்பேர்க் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

20 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றது. மார்க்ரம் 51 ஓட்டங்களும் க்லாசென் 50, வன் பில்ஜொன் 34 ஓட்டங்களும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் மொஹமட் நவாஸ், ஹசன் அலி இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து, 189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, போட்டி முடிவடைய ஒரு பந்து மீதமிருந்த நிலையில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களையும் பஃஹீம் அஷ்ரப் 30 ஓட்டங்களையும் பெற்றனர். தென்னாபிரிக்க அணியின் ஹெண்ட்ரிக்ஸ் 3 விக்கெட்டுக்களையும் ம்சி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக மொஹமட் ரிஸ்வான் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட தொடரில் 1 -0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## சென்னையை வீழ்த்தியது டெல்லி கப்பிடல்ஸ்!

ஐ.பி.எல். 14 ஆவது சீசனின் நேற்று நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி கப்பிட்டல்ஸ் அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது. துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட், பஃப் டு பிளஸி ஆகியோரை சொற்ப ஓட்டங்களுக்கு இழந்தது. அடுத்துவந்த சுரேஷ் ரெய்னா, மொயின் அலி, அம்பாத்தி ராயுடு, சாம் கரன் போன்றவர்கள் சிறப்பாக விளையாடியதால் 20 ஓவர்கள் முடிவில் 188/7 ரன்கள் எடுத்தது சென்னை.

அந்த இலக்கைத் துரத்திய டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் துவக்க வீரர்கள் பிரித்வி ஷா, ஷிகர் தவான் இருவரும் சிறப்பாக விளையாடினர். பிரித்வி ா 38 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் விளாசி 72 ஓட்டங்கள் சேர்த்தார். தவான் 54 பந்துகளில் 10 பவுண்டரி, 2 சிக்ஸர்கள் துணையுடன் 85 ரன்கள் சேர்த்தார். இறுதியில் டெல்லி அணி 18.4 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபாரமான வெற்றியைப் பெற்றது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஷிகர் தவான் தெரிவானார்.






## சிரி ஏ கால்பந்துத் தொடர் டொரினோவுக்கு வெற்றி

இத்தாலி நாட்டில் நடைபெற்று வரும் சிரி ஏ கால்பந்துத் தொடரின் நேற்றைய போட்டியில் உடினெஸெ, டொரினோ அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன. இந்தப் போட்டியில் இரு அணிகளும் ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காது கடும் போட்டியை வெளிப்படுத்தி விளையாடின. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

61ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பினை டொரினோவின் அன்ட்ரே பெலொட்டி கோலாக்க, அந்த அணி முன்னிலை பெற்றது. அதன் பின்னர் இரு அணிகளாலும் கோலடிக்க முடியவில்லை. இறுதியில் 1 - 0 என்ற கணக்கில் டொரினோ இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.

## வொல்வோ கார் ஓபின் டென்னிஸ் தொடர் முதல் நிலை வீராங்கனை அஷ்லே பார்ட்டி அதிர்ச்சித் தோல்வி

வொல்வோ கார் ஓபின் சர்வதேச பெண்கள் டென்னிஸ் போட்டித் தொடர் அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இதில் ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் நம்பர் வன் இடத்தில் இருப்பவரான ஆஸ்திரேலிய வீராங்கனை அஷ்லே பார்ட்டி, 71 ஆவது இடத்தில் உள்ள ஸ்பெயினின் பௌலா படோசாவை எதிர் கொண்டார்.



76 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் அஷ்லே பார்ட்டி 4 - 6, 3 - 6 என்ற நேர் செட்டில் பௌலா படோசாவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார்.

இன்று காலை நானும் எனது பயிற்சியாளரும் நிறைய விடயங்களை பேசிக்கொண்டோம். என்னுடைய ஆட்டத்தில் கவனம் இருக்க வேண்டும் என்பதே எமது எண்ணமாக இருந்தது. உலகின் முதல் நிலை வீராங்கனையோடு விளையாடப் போகிறேன் என்பது எனக்குத் தெரியும். அதே நேரம் களிமண் ஆடுகளத்தில் விளையாடுவது எனக்கு நம்பிக்கை தந்தது. இத்தகைய களங்களில் எப்படி விளையாட வேண்டும் என்பதை நான் நன்கறிவேன் என்று போட்டியின் பின்னர் தெரிவித்திருக்கிறார் 23 வயதான பௌலா படோசா.

# சென்னை - டெல்லி மோதலில் சில பதிவுகள்!

சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதிய நேற்றைய போட்டியில் சில முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

டெல்லி அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஷிகர் தவானும், பிரித்வி ஷாவும் 138 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்தனர். இது டெல்லி அணியில் மூன்றாவது மிகப்பெரிய ஆரம்ப இணைப்பாட்டமாக பதிவானது. இவர்கள் இணைந்து அடித்த 138 ஓட்டங்கள், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான இரண்டாவது மிகப்பெரிய இணைப் பாட்டமாக மாறியுள்ளது.

ஷிகர் தவான் இப்போட்டியில் 10 பவுண்டரிகள் விளாசியதன் மூலம், ஐ.பி.எல். வரலாற்றில் 600 பவுண்டரிகள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். 601 பவுண்டரிகளை மொத்தமாக இவர் பெற்றிருக்கிறார்.

சென்னையின் சுரேஷ் ரெய்னா 54 ஓட்டங்கள் எடுத்தார். அவருக்கு இது 39ஆவது அரைச் சதமாகும். இதன்மூலம், அதிக அரைச் சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு இவர் முன்னேறியுள்ளார்.




கடந்த ஆண்டில் டெல்லி, சென்னை அணிகள் இரண்டு முறை நேருக்கு நேர் சந்தித்திருந்தன. இரண்டிலும் டெல்லி வெற்றி பெற்ற நிலையில், தற்போது 14 ஆவது சீசனிலும் டெல்லி அணி தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்கிறது.

14 ஆவது சீசனில் தனது முதல் லீக் போட்டியில் சென்னை அணி தோல்வியடைந்துள்ளது. இதற்கு முன் 2013 ஆம் ஆண்டில் தான் தனது முதல் லீக் போட்டியில் சென்னை தோல்வியைச் சந்தித்தது.

சென்னை அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி ஆவேஷ் கான் வீசிய பந்தில் டக் - அவுட் ஆனார். கடந்த 108 இன்னிங்ஸ்களில் இவர் ஒரு முறை கூட டக் - அவுட் ஆனதில்லை. ரி20 கிரிக்கெட்டில் கிறிஸ் கெய்ல் 145 இன்னிங்ஸ்களில் டக் - அவுட் ஆகாமல் இருந்ததுதான் சாதனையாக உள்ளது.

நேற்றைய ஆட்டமிழப்பின் மூலம், ஐ.பி.எல். வரலாற்றில் நான்காவது முறை டோனி டக் - அவுட் ஆகியுள்ளார். இதற்குமுன் 2015ஆம் ஆண்டில் தான் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் இவர் திரும்பியிருந்தார்.

## ஐ.பி.எல். 2021 ஹைதராபாத் - கொல்கத்தா அணிகள் இன்று பலப்பரீட்சை

ஐ.பி.எல். இன் 14 ஆவது சீசனின் இன்றைய போட்டியில் ஒயின் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் டேவிட் வோர்னர் தலைமை தாங்கும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் மோதுகின்றன.

ஐ.பி.எல். தொடரொன்றில் அணிக்கு முழு சீசனுக்கும் ஒயின் மோர்கன் தலைமையேற்றிருப்பது இது முதல்தடவை என்பதால் அவர் குறித்த எதிர்பார்ப்பும் அதிகமாகவே காணப்படுகிறது. சென்னையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு புத்தாண்டு கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா!

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தகவல்

குறைந்த வருமானம் ஈட்டும் மற்றும் சமுர்த்தி பயனாளிகளுக்கு புத்தாண்டுக்கு கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் அடுத்த வாரமளவில் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தக் கொடுப்பனவை வழங்கும்போது கொரோனாத் தொற்றால் இன்னல்களை சந்தித்துள்ள குடும்பங்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான பணிக்குழு புத்தாண்டு விடுமுறைக்கு முன்னர் 5 ஆயிரம் ரூபாவை வழங்கும் நடவடிக்கைகளை உறுதி செய்யும் என்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.



## ஈழத்து குருசாமிகள் ஒன்றியம் நேற்று அங்குரார்ப்பணம்



யாழ்ப்பாணம், ஏப். 11

ஈழத்து குருசாமிகள் ஒன்றியம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஈழத்து சபரிமலை ஐயப்பன் தேவஸ்தான மண்டபத்தில் சிவ சிறி ஹரிஹரசுதன் சிவாச்சாரியார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரதம விருந்தினராக புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிவகுரு ஆதீனம் வேலன் சுவாமிகள் உட்பட ஐயப்ப பக்தர்கள் கலந்துகொண்டனர்

## ஊடகவியலாளர்கள் கிளிநொச்சி விஜயம்!

இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினருக்கும், கிளிநொச்சி ஊடகவியலாளர்களிற்குமிடையில் இன்று (ஞாயிற்றுக் கிழமை) விசேட நட்புறவு கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சி ஊடக மையத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ் சிங்கள ஊடகவியலாளர்களுக்கிடையிலான நட்புறவை அதிகரித்தல், ஊடக தொழில்துறை சார் விடயங்களை மேம்படுத்தல், தமிழ் சிங்கள இன நல்லிணக்கத்தை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன் போது தமிழ் சிங்கள் இளம் ஊடகவியலாளர்களுக்கு 2 ஆம் மொழி அறவை மேம்படுத்தல், தமிழ், சிங்கள, இஸ்லாமிய ஊடகவியலாளர்களை தெற்கு மற்றும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று நட்புறவை வளர்த்தல், தமிழ் சிங்கள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு இரு தரப்பினருக்குமான உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட திட்டங்கள் ஆராயப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை பெண் ஊடகவியலாளர்களின் தொழில்துறைசார் சவால்களை அடையாளம் கண்டு அவர்களையும் ஊடகத் துறையில் செயற்படுத்துவற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் தீர்மானம் எட்டப்பட்டது.

அரசியல், இனப்பிரச்சினைகள் கடந்து அனைத்து இன மத ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ், சிங்கள், இஸ்லாமிய ஊடகவியலாளர்கள் மத்தியில் புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாக அனைத்து இனங்களும் ஒற்றுமையுடன் நாட்டில் வாழ்வதற்கான அத்திபாரத்தை ஊடகவியலாளர்களின் மத்தியிலிருந்து ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இன்றைய தினம் வெளிக்கொண்டு வரப்பட்டது.

அதற்கான வேலைத்திட்டங்களை இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினருக்கும் கிளிநொச்சி ஊடகவியலாள்களும் இணைந்து மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாகத் தமிழ் இளம் ஊடகவியலாளர்ளுக்கு சிங்கள மொழியையும், சிங்கள ஊடகவியலாளர்களுக்கு தமிழ் மொழியையும் 2 ஆம் மொழியாக கற்பிப்பதற்கும்.

மொழி ரீதியில் புரிந்துணர்வை ஏற்படுத்தி ஊடகவியலாளர்களுக்கிடையில் நட்பை அதிகரிக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டது.

அதற்கான வேலைத்திட்டங்கள் விரைவாக முன்னெடுக்க முடியும் எனவும் இரு தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்படவும் தீர்மானம் எட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் களத்திலிருந்து பணிபுரியும் ஊடகவியலாளர்களும் பங்கு கொண்டனர்.

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Nurses, Engineering Diploma holders in HNDE, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org